[1978 மார்ச் 2

(இ) மேற்கண்ட குமரி அணையை சீர்படுத்த ரூ. 12.57 இலட்சத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. குமரி அணையின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு விவசாயம் பாதிக்காமல் இருப்பதற்கு மாற்று வழியில் தற்போது நீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: பழையாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இந்த அணை உடைந்து 8 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அதனைச் சீர் படுத்துவதற்கான வேலைகள் குறித்த மதிப்பீடுகள் ஆய்வில் இருந்தால், அதை நம்பி வாழ்கிற விவசாயிகளின் நிலை எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாற்று வழியில் தண்ணீர் கொடுக்கப்பட்டாலும் கூட, அவர்கள் மிகுந்த காவல் போட்டு, தண்ணீரை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதோடு, இதில் செலவு அதிகமாக இருப்பதால், உடனடியாக இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எட்டு ஆண்டுகளாகப் பொறுத்துக் கொண்டிருந்தவர்கள் இந்த ஆண்டும் பொறுத்துக்கொள்ளக்கூடாதா என்று கேட்கத் தோன்றும். இருந்தாலும், இந்தத் திட்டத்தினுடைய அவசியத்தைக் கருதி விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 165, 166 ஆகியவை இறுதியில் எடுத்துக்கொள்ளப்படும்.

Compensation for Patta Lands.

* 167. *Q.*—Thiru D. V. D'MONTE: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representations from landowners whose patta lands have been declared as Slum area and taken over for development by the Tamil Nadu Slum Clearance Board, that compensation has not been paid to them so far, for the said lands ; and

(*b*) if so, the reasons for the delay in the payment of compensation ?

1978 மார்ச் 2]

பட்டா நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை.

திரு. டி. வி. டி'மாண்டி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்டு அப்பகுதியை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டா நிலங்களின் சொந்தக்காரர்களிடமிருந்து, அந் நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை இதுவரையில் வழங்கப்படவில்லை என்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) & (இ) குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டுவதற்கு இதுவரை பயன்படுத்தப்பட்ட 2,718 மனைகளில் (கிரவுண்டு), 123 மனைகள் தனிப்பட்டவர்களுடையதாகும். குடியிருப்புகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் உரிமையாளர்களில் சிலர், இழப்பீட்டுத் தொகையை அளிக்கக் கோரி அரசினை அணுகியுள்ளனர். இத்தொகையை நிர்ணயம் செய்யும் தகுதி பெற்ற அதிகாரியாகிய, சென்னை மாவட்ட ஆட்சியாளர், உயர்நீதி மன்றம் இது சம்பந்தமான முந்தைய சட்டத்தை செல்லாது என்று அறிவித்து விட்டதால், ஏற்பட்டுள்ள சில சிக்கல்களை, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. அவை தெளிவாக்கப்பட்ட பின், இழப்பீட்டுத்தொகை அளிக்கப்படும்.

THIRU D. V. D'MONTE: Sir, instances have come to my notice where the Tamil Nadu Slum Clearance Board have begun to put up permanent structures on lands which have been surrendered by landowners without paying compensation or acquiring the land under the Tamil Nadu Slum Clearance Act. This has been causing a great deal of hardship to middle-class people and others. May I know what steps are being taken by the Government to set right this position and if so, when ?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Deputy Chairman, Sir, under section 17 of the Act, the Government can acquire land on payment of the cost. Under this section, Government have taken over 123 grounds of privately owned lands covered

by slums for clearance purposes. Section 20 of the Act stipulates that the compensation payable for any land acquired under this Act shall be the market value. Some of the lands taken over pertain to proceedings under the Tamil Nadu Slum Improvement (Acquisition of Land) Act, 1954, which was struck down by the High Court. There are some legal hurdles in bringing such land within the scope of the provision for determining the compensation under the Slum Areas (Improvement and Clearance) Act, 1971. The determination of compensation payable under the 1971 Act by the competent authority is held up on this account. As to the question of acquiring private land for slum clearance purposes, the gravity of the situation that the slum-dwellers are living there is the criterion.

THIRU D. V. D'MONTE: Sir, according to the provisions of the Act, as stated by the Hon. Minister, compensation must precede take-over. That is not being done.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Deputy Chairman, Sir, I am not quite clear about it. If the hon. Member puts a separate question, I will answer it.

திரு. ஜார்ஜ் கோமகன் : இது போன்ற வழக்குகள் எத்தனை இருககின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Section Officers in Highways Department.

* 168 Q.—THIRU V. THANGAPANDIAN: (on behalf of Thiru A. BALASUBRAMANIAM): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of persons promoted as Section Officers and Union Engineers in the Tamil Nadu Highways Department before 1973; and

(b) among them, the number of persons whose services have not yet been made permanent?